தரம் 10	**தி/கிண்/குறிஞ்சாக்கேணி மகளிர் மகா வித்தியாலயம்**	புள்ளி

முதலாந் தவணை மதிப்பீடு - 2020

COVID - 19 விடுமுறைகால செயற்பாடுகள்

பாடம் : தமிழ் சுட்டெண்:..... நேரம் : 02 மணி

பகுதி – I

கவனிக்க :

1. **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் I இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.**
2. **1தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றினதும் (1) (2) (3) (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
3. **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் பள்ளடியை (✕) இடுக.**

- **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய சினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. "வண்டோ கானத்திடையிருந்து வந்தே கமல மதுவுணரும்"இங்கே கமலம் எனப்படவது
1) அல்லி 2) தாமரை 3) ஆம்பல் 4) நீலோற்பலம்

02. தெண்ணீர்க்கயத்து சிறுமீன் சினை என்பதில் வந்துள்ள கயம் என்ற சொல் குறிப்பது
1) கடல் 2) குளம் 3) ஆறு 4) ஏரி

03. "உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு"
1) பெயர் 2) இடை 3) உரி 4) வினை

04. 'ஈதலின்றி வாழ்தல் இழிவு இங்கே வந்துள்ள ஈதல் என்பதன் எதிர்ச்சொல்
1) கொடை 2) ஏற்றல் 3) வள்ளன்மை 4) வண்மை

05. 'இடுக்கண் வருங்கால் நகுக' இங்கே வந்துள்ள இடுக்கண் என்பதன் பொருள்
1) மகிழ்ச்சி 2) இன்பம் 3) ஆத்திரம் 4) துன்பம்

06. வசைச் சொல் பேசுவோர் அழிந்தொழிவதே நல்லது வசை என்பதன் எதிர்ப்பதம்
1) இசை 2) புகழ் 3) பழி 4) இகழ்

07. பாணன் என்பதன் ஒத்த சொல்
1) பாங்கி 2) பூட்டி 3) பாடினி 4) பண்டிதை

08. அஞ்சலி என்பதன் ஒத்த சொல்
1) அடக்கம் 2) பயம் 3) ஆபத்து 4) வணக்கம்

09. அன்பு , நாண் , ஒப்பரவு , கண்ணோட்டம் , வாய்மை என்பன
1) ஐங்குணம் 2) சால்பு 3) ஐம்பொறி 4) ஐம்புலன்

10. கோழியின் ஆண் சேவல் என்பது போல நண்டின் ஆண்
1) குண்டு 2) கடுவன் 3) அலவன் 4) போத்து

11. ஆட்டின் கூட்டம் மந்தை என்பது போல யானையின் கூட்டம்
1) நிரை 2) பந்தி 3) குழாம் 4) கூட்டம்

12. ஆந்தை அலறும் என்பது போல பசு
1) கத்தும் 2) உறுமும் 3) கதறும் 4) முக்காரமிடும்

www.ikeu.lk


LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
LEARN EASY
KNOWLEDGE IS POWER
zoom
மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
இன்னும் பல
தரம்
01-A/L
Medium
தமிழ்/ English
76667-4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk

13. மடுவம் என்ற பிரதேச வழக்குச் கொல் இலங்கையின் எந்தப் பிரதேசத்திற்குரிய சொல்
1) கிழக்கு 2) வடக்கு 3) மலையகம் 4) தென்னிலங்கை

14. 'நுளம்பார் பேசினார்' என்பது எவ்வகை வழுவமைதி
1) தினை 2) பால் 3) எண் 4) இடம்

15. Multimedia என்பதன் தமிழ் வடிவம்
1) இணையம் 2) வலைத்தளம் 3) பல்லூடகம் 4) தனியூடகம்

16. வரமாட்டான் என்பதன் பகுதி
1) வருதல் 2) வா 3) வந்து 4) வர

17. பின்வருவனவற்றுள் பொதுப்பாற் சொல்
1) பிரான் 2) சீமான் 3) அறிவாளி 4) தேகி

18. கடலும் கடல் சார்ந்த இடமும்
1) முல்லை 2) மருதம் 3) நெய்தல் 4) பாலை

19. திறமை வெளிக்காட்டாது இருத்தலை விளக்குவதற்கான உவமைத் தொடர்
1) குடத்துக்குள் விளக்குப் போல 2) கிணற்றுத் தவளை போல
2) தாமரை இலைத் தண்ணீர் போல 4) இலைமறைகாய் போல

20. வயல்வெளி பச்சைப் பசேலெனக் காட்சியளித்தது இதில் பச்சைப்பசேல் என்பது
1) இணைமொழி 2) அடுக்குத் தொடர் 3) அடுக்கிடுக்குத் தொடர் 4) இரட்டைக் கிளவி

21. மாலா பாடசாலை விட்டுச் சென்றாள் இவ்வாக்கியம் என்ன பொருளில் வந்துள்ளது
1) அழித்தல் 2) ஆக்கல் 3) நீத்தல் 4) ஒத்தல்

22. காலையில் கடைக்குத் தங்கையுடன் சென்றேன் இதில் வந்துள்ள எழுவாய்
1) தம்பி 2) காலை 3) நான் 4) கடை

23. பச்சைக் கிளி இனிமையாகப் பேசியது இதில் வந்துள்ள வினையடை
1) பச்சை 2) பேசியது 3) இனிமையாக 4) கிளி

24. உறவு முறைக் கடித உறுப்பு அல்லாதது
1) ஒப்பம் 2) முகவரி 3) தலைப்பு 4) உடல்

25. நான் பாடுவேன் அல்லது ஆடுவேன் இது எவ்வகை வாக்கியம்
1) கூட்டு 2) தனி 3) கலப்பு 4) தொடர்

26. வளமுடன் வாழ்க! என்பது
1) கூற்று வாக்கியம் 2) ஏவல் வாக்கியம் 3) வியங்கோள் 4) கூட்டு

27. எழுவாய் வேற்றுமை என அழைக்கப்படுவது எத்தனையாம் வேற்றுமை
1) 2ம் வேற்றுமை 2) 1ம் வேற்றுமை 3) 3ம் வேற்றுமை 4) 4ம் வேற்றுமை

28. மாணவி பூக்களைப் பரித்தாள் இங்கு பூக்கள் என்பது
1) பொருளாகு பெயர் 2) இடவாகு பெயர் 3) சினையாகு பெயர் 4) காலவாகு பெயர்

29. 4ம் வேற்றுமையின் சொல்லுருபு யாது?
1) ஓடு 2) ஐ 3) நிமித்தம் 4) கண்

30. பரி , அசுவம் , புரவி , மா ஆகியன குறிக்கும் ஒரு சொல்
1) சிங்கம் 2) புலி 3) குதிரை 4) யானை

www.ikeo.lk

- **பின்வரும் வாக்கியங்களிலுள்ள வாக்கியத்தின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

31. பாரதியால் குயில் பாட்டுப் ……..
    1) பாடினார் 2) பாடப்பட்டது 3) பாடியது 4) பாடுவார்

32. மக்கள் என்னுடன்
    1) சாப்பிட்டார் 2) சாப்பிட்டது 3) சாப்பிட்டனர் 4) சாப்பிட்டான்

33. நானும் நீயும் அவனும் சில விடயங்களில்
    1) ஒத்திருக்கின்றீர் 2) ஒத்திருக்கின்றோம் 3) ஒத்திருக்கின்றீர்கள் 4) ஒத்திருக்கின்றனர்

- **பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்றுள்ள சொற்றொகுதியைத் தெரிவு செய்க.**

34. 1. உயர்திணை : மனிதன் , சிறுமி , நண்பர்
    2. அ.்றிணை : மரம் , செடி , குருவி
    3. பலர்பால் : ஆசிரியர்கள் , மாணவர்கள் , பெற்றோர்
    4. ஆண்பால் : குருடன் , நோயாளி , கிழவன்

35. 1. அடவி – காடு , அபாயம் - ஆபத்து
    2. ஆரம்பம் - முடிவு , இயற்கை - செயற்கை
    3. உழவன் - உழத்தி , தேவன் - தேவி
    4. வரவு – செலவு , வினா – கேள்வி

36. 1. வாழை – கச்சல் , தென்னை – குரும்பை
    2. சோளம் - கதிர் , வாழை – குழை
    3. நெல் - அரிசி , பலா - இலை
    4. திறப்பு – கோர்வை , நூல் - பந்து

- **புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

37. ஜனாதிபதி தேர்தலுக்குரிய …… தாக்கல் செய்வதற்கான முடிவத்திகதி அறிவிக்கப்பட்டது.
    1) பதிவு 2) விண்ணப்பம் 3) விஞ்ஞாபனம் 4) வேட்புமனு

38. பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 25 ஆவது ஆண்டு நிறைவில் ……. கொண்டாடப்படுவது
    1) ஆண்டு விழா 2) பொன் விழா 3) வைர விழா 4) வெள்ளி விழா

39. புலவர் தன் எழுதிய கவிதைக்கு …… எழுதினார்
    1) பதிப்புரை 2) அணிந்துரை 3) வரவேற்புரை 4) முன்னுரை

40. கீழே தரப்பட்ட வாக்கியங்கள் ஒழுங்கின்றி காணப்படுகின்றது அதனை ஒழுங்குபடுத்திப நந்தியை அமைக்க பொருத்தமான வைப்பு முறையை தெரிவு செய்க.
    அ. அக்காலத்து சட்ட நிபுணருக்குள்ளே தலை சிறந்தவர் ஆவார்
    ஆ. பாரிய வழக்குகளுக்கும் அப்பீல்களுக்கும் அவரை நியமிப்பது வழக்கம்
    இ. பிறிற்றோ என்பவர் பிரசித்தி பெற்ற வழக்கறிஞர்.
    ஈ. இலங்கையிலேயுள்ள எல்லாரும் அவரை அறிவர்.
    1) அ , ஆ , இ , ஈ 2) அ , ஈ , ஆ , இ
    3) இ , அ , ஈ , ஆ 4) இ , ஆ , ஈ , அ

www.lkedu.lk

தரம் 10	**தி/கிண்/குறிஞ்சாக்கேணி மகளிர் மகா வித்தியாலயம்**	புள்ளி

முதலாந் தவணை மதிப்பீடு – 2020

COVID - 19 விடுமுறைகால செயற்பாடுகள்

பாடம் : தமிழ் II சுட்டெண்:..... நேரம் : 03மணி

கவனிக்க :

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.**
- **இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.**

01. சுருக்கமான விடை தருக.

01. நீரே டுத்து வருதற் கவள்மணி என்பதனை சந்திபிரித்து எழுதுக.
02. பேச்சு வழக்குச் சொல்லை எழுத்து வழக்குச் சொல்லாக மாற்றி எழுதுக.
    'பெருநாளொண்டு வந்தா ஒங்களுக்கு இருப்பிடமில்ல'
03. காது கொடுத்தல் என்ற தொடரின் பொருள் என்ன?
04. அணி என்ற சொல் பெயராகவும் , வினையாகவும் வர வாக்கியம் எழுதுக.
05. பின்வரும் செயப்பாட்டு வாக்கியத்தினை செய்வினை வாக்கியமாக மாற்றுக.
    - சிற்பினால் சிலைகள் வடிக்கப்பட்டன
06. கோழி நெல்லைக் கொத்தியது என்னும் வாக்கிய உறுப்புக்களுக்கு அடைமொழியிட்டு எழுதுக.
07. 'நடந்தனன்' என்பதை பகுத்து எழுதுக.
08. துன்ப நிலையினைப் பெரிது படுத்திக் காட்டும் இணைமொழியைத் தெரிவு செய்க.
    (கண்ணீரும் கம்பலையும் , கங்குகரை , மூச்சுப் பேச்சு , மாசு மறு)
09. பின்வரும் வாக்கியத்தின் எழுவாய் , பயனிலையைக் குறிப்பிடுக.
    'மேற்கினை நோக்கி அமர்கின்றேன் கல்லிலே'
10. "அம்மா குசினியில் சமையல் வேலைகளில் ஈடுபட்டாள்" இங்கு குசினி என்பது என்ன மொழிச் சொல்

(20 புள்ளிகள்)

02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக.

✓ **நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.**

அ. கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பில் முழு உலகமும் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.சவால் பாரியதாக இருந்தாலும் அதற்கான பதில் நடவடிக்கை அதைக் காட்டிலும் ஆக்கபூர்வமாக உள்ளதென உலக சுகாதாரஸ்தாபனத்தின் அவசர சுகாதார நிகழ்ச்சி திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. சீனாவின் வுஹான் நகரில் உருவாகிய கொரோனா வைரஸ் தற்போது லக நாடுகள் அநேகமானதை அச்சுறுத்தி வருகின்றது.

www.lkedu.lk

விளக்கக் கட்டுரை

ஆ. நாம் வாழும் இந்த பூமியில் எதிர்கால தலைமுறையும் நலமாக வாழவேண்டுமாயின் சுற்றுப்புறச்சூழலினைப் பாதுகாக்க வேண்டியது அவசியமாகக் காணப்படுகன்றது. குறிப்பாக சுற்றுப்புறச் சூழல்என்பது உலகில் இயற்கையாக காணப்படும் எல்லா உயிர்ப் பொருட்களையும் உயிரற்ற பொருட்களின் தொகுப்பையும் குறிப்பதாகும்.

இது தொடர்பான மேடைப்பேச்சு

இ. பண்டைத் தமிழ் இலக்கியங்களை கற்றல் மனித வாழ்வுக்கு இன்றியமையாத செயல் என்று கரதும் ஒருவருக்கும் நேரத்தை வீணாக்கும் செயற்பாடு என்று கூறும் ஒருவருக்கும் இடையிலான உரையாடல்

ஈ. பணம் பத்தும் செய்யும் என்பார்கள் ஆனால் வாழ்க்கையில் வறுமையும் கூட பத்திற்கு மேலே செய்யும் என்பதை எவரும் இங்கு சொல்வதில்லை சிறுமியின் வாழ்கையிலும் இத்திண்டாட்டமே மேலோங்கிக் காணப்பட்டது. **சிறுகதை**

(25 புள்ளிகள்)

03. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் கருத்தை 40 – 50 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக.

கல்வி நமக்கு பல நன்மைகளைத் தருின்றது.கல்வியினால் அறிவு வளர்கின்றது. எல்லாவற்றிலும் மேலாக கல்வி நமக்குக் கடவுள் உண்மையை அறிவுறுத்தி நாம் கடவுளை அடையத்துனை செய்கின்றது.கடவுளை வணங்கத்துணை செய்யாத கல்வி சிறந்த கல்வியாகாது. கல்வியின் மூலம் கடவுளின் குண விஷேடங்களை யும் அவரை அன்பு செய்யும் முறையையும் அவரை அடைந்தோர் வரலாறுகளையும் அறிகின்றோம்.அவ்வாறு அறிவதனால் நமக்கு கடவுளிடத்தில் அன்பு உண்டாகின்றது.அவ்வன்பு கடவுட்பணியில் நம்மை ஈடுபடுத்துகின்றது.கடவுட் கொள்கை இல்லாதவர்கள் கல்வியினால் சமய வாழ்வில் ஊக்கம் அடைகின்றார்கள். கல்வியைப் போலவே கடவுள் கொள்கையைப் பெறுவதற்கும் இளமைப் பருவமே ஏற்ற காலமாகும். இளமையிற் பழகிய பழக்கவழக்கங்கள் எக்காலத்திற்கும் நிலைத்து நிற்கும். 'தொட்டிலில் பூண்ட குணம் சுடுகாடு மட்டும்' ஆதலினால் நமது பழக்கவழக்கங்களை சிறு வயதிலேயே திருத்தியனவாகக் கற்றுக் கொள்ள வேண்டும்.

கடவுள் நம்பிக்கையையும் கடவுள் தொண்டையும் இளமையிலேயே போதித்தால் அது ஒருவரது வாழ்க்கை முழுவதும் கலந்து நிற்கும். வாழைப்பழத்தில் இலகுவாக ஊசி ஏறட்றுவது போல சிறுவர் மனதிலும் கடவுள் நம்பிக்கை நன்கு புரியும். அவ்வாறே நற்பழக்கங்களையும் இளமையிலேயே பழகிக் கொள்ளுதல் எளிதான காரியமாகும். இளமையிற் கற்றுக் கொள்ளாது வயது வந்த பின் நற்பழக்கங்களை மேற்கொள்ளலாமெனில் பொருந்தாது.

(10 புள்ளிகள்)

www.ikeu.lk

04. பின்வரும் கவிதையைப் படித்து கீழேயுள்ள வினாக்களுக்கு விடை தருக.

விதியை நோவர் தம் நண்பரைத் தூற்றுவர்.
வெகுளி பொங்கி பகைவரை நிந்திப்பர்
சதிகள் செய்வர் பொய்ச்சாத்திரம் பேசுவர்
சாதகங்கள் புரட்டுவர் பொய்மை சேர்
மதியினிற் புலை நாத்திகங் கூறுவர்
மாய்ந்திடாத நிறைந்த விருப்பமே
கதிகள் யாவும் தருமென லோர்ந்திடார்
கண்ணிலாதவர் போல திகைப்பர் காண்

01. இக்கவிதையை பாடியவர் யார்? எப்பகுதியில் இக்கவிதை இடம்பெற்றுள்ளது?
02. தாம் விரும்பியதை அடைய முடியாதவர்களின் இயல்புகள் 4 தருக.
03. நாத்திகம் , கதி என்பவற்றில் எதிர்ப்பதத்தைத் தருக.
04. கண்ணில்லாதவர் போல் திகைப்பவர் யார்?
05. கதையின் மையப் பொருள் யாது?

(10 புள்ளிகள்)

05. உமது பாடசாலையில் நடந்து முடிந்த இல்ல விளையாட்டுப் போட்டி பற்றி உமது நண்பிற்கு 100 சொற்களில் கடிதம் வரைக.

அல்லது

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட வாசனைத்திரவியங்கள் பற்றியதான விளம்பரம் ஒன்று எழுதுக.

(15 புள்ளிகள்)

www.lkedu.lk

தரம் 10	**தி/கிண்/குறிஞ்சாக்கேணி மகளிர் மகா வித்தியாலயம்** **முதலாந் தவணை மதிப்பீடு - 2020** **COVID - 19 விடுமுறைகால செயற்பாடுகள்**	புள்ளி

பாடம் : தமிழ் - III சுட்டெண்:..... நேரம் : 03மணி

கவனிக்க :

- ✓ **தரப்பட்டுள்ள் 1 , 2 , 3 , 4 , 5 எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- ✓ **இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.**
- ✓ **கையெழுத்துக்கள் தெளிவானதாக இருத்தல் வேண்டும்**

01. சுருக்கமான விடை தருக.

1) ''மடைத்தலையில் ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாங் கொக்கு''

அ. கொக்கின் செயல் மூலம் வெளிப்படும் விழுமியப்பண்பு யாது?
ஆ. வாடியிருத்தல் என்பதன் பொருள் யாது?

2) ''விதியை நோவர் தம் நண்பரைத் தூற்றுவர்
வெகுளி பொங்கி பகைவரை நிந்திப்பார் .....

அ. இக்கூற்றைக் கூறியவர் யார்?
ஆ. வெகுளி என்பதன் பொருள் யாது?

3) 'கணக்காயரில்லாதவூரும் பிணக்கறுக்கு மூத்தோரில்லா வகைக்களனும்'

அ. இங்கோ ''மூத்தோர்'' என்போர் யார்?
ஆ. 'அவைக்களன்' என்பதன் பொருள் யாது?

4) 'மாமிகளே என்ற மருதங்கிளி வங்கிசமே ஏலங்கிராம்பே'

அ. 'வங்கிசம்' என்பது எதனைக் குறிக்கின்றது.
ஆ. 'கிராம்பே' என்பதை எழுத்து வழக்கில் தருக.

5) 'புலங்களோடு கரணமும் ஆவியும் .....

அ. இங்கு கூறப்படும் ஐம்புலன்களும் எவை?
ஆ. அந்தக் கரணங்கள் எனது என்பதைத் தருக.

6) 'தேம்படு பனையின் திரழ்பழந் தொருவிதை
வாதுறவோங்கி வளம்பெற .....

அ. இப்பாடலைப் பாடியவர் யார்?
ஆ. இதில் கூறப்படும் நாற்படைகளும் எவை.

7) 'யானைத்தந்தத்தால் படைக்கப்பட்ட பதுமை போல
அவள் வீட்டு வாசலிலே நின்றாள்'

அ. பதுமை என்பதன் பொருள் யாது?
ஆ. இங்கு கூறப்பட்டுள்ள அணி யாது?

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

8) ஒருவர் ஒருவராகவோ இருவர் இருவராகவோ அன்றிப் பலர் கூட்டம் கூட்டமாகவோ விவாதத்திற்கு வரலாம்.

அ. இக்கூற்றைக் கூறியவர் யார்?

ஆ. இக்கூற்றைக் கூறியவரின் ஆளுமையைக் குறிப்பிடுக.

9) தண்டா மரையின் உடன் பிறந்தும்
தணண்டேன் நுகரா மண்டூகம்

அ. இது எக்காலத்துக்குரிய நூலாகும்?

ஆ. மண்டூகம் என்பது யாது?

10) கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே
மிக்காரைச் செர்தல் மிகமான முன் இனிதே

அ. இது இடம்பெற்ற நூல் எது?

ஆ. 'மக்கார்' எனப்படுவோர் யார்?

(20 புள்ளிகள்)

02. பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

1) உப்பில்லாக் கங்சியினை யுண்ணு மறுசுவைபோல்
தப்பிய கந்தைபீ தாம்பரம் போல் - ஒப்பும்
பனையோலைப் பாயிற் படுத்துறங்கும் வாழ்வார்
மனங்கொண்டது மாளிகை.

அ. இப்பாடலில் இடம்பெற்றுள்ள முதுமொழி வலியுறுத்தும் உண்மை யாது?

ஆ. அதை வலியுறுத்துவதற்கு கவிஞர் தரும் எடுத்துக் காட்டுக்கள் யாவை?

2) ' விலகு பிள்ளை' என்று வழக்கமாகச் சொல்லுவதைச் சொல்ல முன்னமே விசுவாத பிள்ளை மேடையில் விலகி இடங்கொடுத்தார். நாவலர் அவர்களின் நிலை கம்பீரமான தோற்றம் வீறுகொண்ட பார்வை எண்ணங்களின் வேகம் இவற்றை வர்ணிக்க அந்த சந்தர்ப்பத்தில் ஒரு கம்பர் இல்லை. 'அது கிடக்க எடுத்துக் கொண்டு வா , தந்தி தபாற் கட்டுக்களை என்றார் நாவலர் அவர்கள்.

அ. நாவலர் இவ்வுரைப்பகுதியில் எவ்வாறு வர்ணிக்கப்படுகின்றர்?

ஆ. 'எடுத்துக் கொண்டு வா , தந்தி தபாற் கட்டுக்களை' என நாவலர் கூறக் காரணம் யாது?

3) கணக்காயர் இல்லாத ஊரும் , பிணக்கு அறுக்கும்
மூத்தோரை இல்லா அவைக்களனும் , பார்த்து உண்ணுந்
தன்மையிலாளர் அயல் இருப்பும் - இமமூன்றும் நன்மை பயத்தல் இல

அ. இதில் கூறப்படும் திரகடுகங்கள் எவை?

ஆ. இம்மூன்று விடயங்களும் இச்செய்யுளில் எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது.

4) காத்திந்தவள் போம் வழி முற்றிலும்
கண்கள் பின்னழ கார்ந்து களித்திட
யாத்த தேருரு ளைப்பட்டு மேழைதான்
யாண்டு தேர்செலு மாங்கிழுப் புற்றெனக்
கோத்த சிந்தையோ ஆடகி யதில்மகிழ்
கொண்டு நாள்களட் பலகழித்திட்டனன்

அ. இதில் கையாளப்பட்ட அணியினை விளக்குக.

ஆ. பாரதியின் பிள்ளைக்காதல் எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகின்றது?

www.kedu.lk

5) அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா – மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவு வாடி இருக்குமாம் கொக்கு.

அ. இந்நீதிப்பாடல் இடம்பெற்ற நூல் எது? பாடிய புலவர் யார்?

ஆ. அடக்கமுடையாரின் சிறப்பு எவ்வாறு விளக்கப்படுகின்றது?

(20 புள்ளிகள்)

03. நீதிப்பாடல்களில்

அ. நாலடியார் குறிப்பிடும் நல்ல நட்பும் தீய நட்பும்

ஆ. விவே சிந்தாமணியில் கூறப்படும் அறிவுடையோர் அறிவற்றோர் இயல்புகள் எவ்வாறு உவமையணி மூலம் எடுத்துக்காட்டப்படுகின்றது.

(10 புள்ளிகள்)

04. பாரதியார் சுயசரிதையில்

அ. முயற்சியற்றோரின் பண்புகளைக் குறிப்பிடுக.

ஆ. அப்பகுதியில் இடம்பெற்றுள்ள உவமை அணிகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

05. நாவலர் எழுந்தார் எனும் கட்டுரையில்

அ. ஆறுமுக நாவலரின் திறமை, நேர்மை காட்டப்படும் விதத்தினை விளக்குக.

ஆ. நாவலர் எழுந்தார் எனும் தலைப்பின் பொருத்தப்பாட்டினை விளக்குக.

(10 புள்ளிகள்)

www.lkedu.lk